FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318722

1. District : மாவட்டம் தேனி PS. காவல்நிலையம் உசிலம்பட்டி மகளிர் காவல் நிலையம் Year: ஆண்டு 2026 FIR No.: முத.அ எண் 03/2026 Date: நாள் 18.07.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106 BNSS.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 17.7.2026 Date from : நாள் முதல் 17.00 மணி நேரம் Date to : நாள் வரை 18.07.2026 காலை 03.00 மணி வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.07.2026 Time : நேரம் 17.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.07.2026 Time : நேரம் 17.00 மணி

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினி நகல்கள்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ. மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், தேனி நகராட்சி, தேனி மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. அப்புலட்சுமி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. சொக்கலிங்கம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 57yrs (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் அரசு ஊழியர் (g) Address : முகவரி மாவட்ட அரசு அலுவலர் அலுவலகம், மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. P. அய்யாஜபாண்டியன், அரசு அலுவலர்
2. P. மாதவன், ஒப்பந்ததாரர் (ஸ்ரீகாளிகா ஒப்பந்த பணியாளர்)
3. K. சுந்தரி, முன்னாள் பணியாளர், தாலுகா அலுவலகம், தேனி
4. K. பாண்டி, உறவினர் எனவும், தினமும் பல உறவினர், தேனி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

நேரில் வரவும் இணைக்கப்பட்டுள்ளது

/

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

18.7.26

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.07.2026.

18/7/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name பெயர் T. RAMESWARI
Rank நிலை Inspector of Police, No. எண்
VMAC, Theni District

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.03/2026, சட்டபிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 மற்றும் சட்டபிரிவு 106 BNSS வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு , காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று , 18.07.2026ம் தேதி மாலை 17.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் S. சுப்புலட்சமி அவர்கள் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த கணினி தட்டச்சு செய்த புகாரை பெற்று 18.07.2026ம் தேதி மாலை 18.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் **S.**சுப்புலட்சுமி, வயது 57/2026,க/பெ. R.செந்தில்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம்,மதுரை,பெறுநர் காவல் ஆய்வாளர்,ஊழல்தடுப்புமற்றும் கண்காணிப்புபிரிவு,தேனிமாவட்டம். நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். 17.07.2026ம் தேதி தேனி மாவட்டம், தேனி தாலுகா, வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் நிலஅளவு, ஆதார் அட்டை திருத்தம், Update, வாரிசு சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம், வருவாய், ஜாதி, OBC சான்றிதழ், முதியோர் விண்ணப்பம் உட்பட பல அரசு சான்றிதழ் பெற அலுவலகம் வரும் பொது மக்களிடம் அரசு நிர்ணயத்த தொகைக்கு அதிகமாக முறைகேடாக பணம் வசூல் செய்வதாதகவும், UPI Transaction மூலம் லஞ்மாக பணம் நேரடியாகவும், தனிநபர்கள் மூலமாகவும் கேட்டு பெறுவதாகவும் கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் நேற்று 17.07.2026-ம் தேதி மாலை தேனி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து சுமார் 16.40 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர் திருமதி. தி.ராமேஸ்வரி மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் இணை ஆய்வு செய்வதற்காக அரசு வாகனம் TN-22G0534 பொலிரோ வாகனத்தில் தேனி தாலுகா, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புறப்பட்டு மாலை சுமார் 17.00 மணிக்கு தேனி, வட்டாட்சியர் அலுவலகம் சென்று அடைந்தோம். மேற்படி அலுவலகம் தேனி-பெரியகுளம் ரோட்டில் இடதுபுறம் உழவர் சந்தை ரோட்டில் மாவட்ட மைய நூலகம் எதிரில் தேனி வட்டாட்சியர் அலுவலகம் அரசு கட்டிடத்தில் இயங்கிவருகிறது. அலுவலகத்தின் 2 நுழைவுவாயில்கள் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. காம்பவுண்டுடன் உள்ள இந்த கட்டிடத்தில் தரைத்தளம் மற்றும் இரண்டு மேல்தளங்கள் உள்ளன. பிரதான நுழைவுவாயில் போர்ட்டிகோவுடன் தெற்குபார்த்துள்ளது. பிரதான நுழைவுவாயிலுக்கு இடதுபுறம் ஆதார் சேவைமையம் உள்ளது. பார்ட்டிகோவைதாண்டி அலுவலக கட்டிடத்தின் பிரதான நுழைவுவாயில் உள்ளது. தரைதளத்தில் நுழைந்தவுடன் நேராகமுதல்தளம் செல்லும் படிக்கட்டு உள்ளது. இதன் வலதுபுறம் பவர் ரூமும்

அதனையடுத்து இ-சேவை மையமும் அதன் எதிரே நில அளவைபிரிவுகளும் உள்ளது. படிக்கட்டின் இடதுபுறம் ஆவணங்கள் வைப்பறை பூட்டியநிலையில் உள்ளது. முதல்தளம் சென்று இடதுபுறம் உள்ளவட்டாட்சியர் அறைபார்த்ததில் யாரும் இல்லை. அதனருகே இருந்த பொதுப்பிரிவு (வருவாய்) பிரிவில் தாசில்தார் குறித்து விசாரித்த போது தாசில்தார் திருமதி.ரத்தினம் ஆர்டிஓபெரியகுளம் அலுவலகத்திற்கு என்குரோச்மெண்ட் சம்மந்தமானமீட்டிங் சென்றுள்ள தாகபெண் அலுவலர்கள் தெரிவித்தும் தற்போது ஆஜரில் தமிழ்நாடு அரசுகேபிள் டிவி நிறுவன துணைமேலாளர்/தனிவட்டாட்சியர் திருமதி.ரத்தினமாலா மற்றும் தேர்தல் பிரிவு துணைவட்டாட்சியர் திரு.கார்த்திக் இருப்பதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்துகாவல் ஆய்வாளர் ஆகிய நான், ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் குழுவினருடன் மேற்படி தனிவட்டாட்சியரிடம் எங்களை அறிமுகம் செயது கொண்டு தேனி வட்டாட்சியர் அலுவலகத்தை திடீர் இணை ஆய்வு செய்ய வந்துள்ளதை தெரிவித்தும் தாங்களும் மற்ற அலுவர்களும் ஒத்துழைப்பு தருமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி அலுவலகத்திலிருந்த அனைத்து அலுவலர்களும், பொதுமக்கள்/தனிநபர்களும் அலுவலகத்தின் இரண்டாவது தளத்தில் இடதுபுறத்தில் வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகவளாகத்தில் உள்ளபெரிய ஹாலில் வரவழைக்கப்பட்டு அனைவரிடமும் செல்போனை பெற்றும், இருக்கையில் அமரவைக்கப்பட்டு ஆண்,பெண் நபர்களை தனித்தனியாக ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் சோதனையிடப்பட்டது. அதன் விவரம் பின்கண்டவாறுஉள்ளது.

தேனிவட்டாட்சியர் அலுவலகப்பணியாளர்கள்

வ.எண்	ஆய்வின் போது இருந்தஅலுவலர்கள் பெயர்	பதவி	ஆய்வின் போதுகையிலிருந்த தொகை
1.	திரு.கார்த்திக்,	துணைவட்டாட்சியர் (தேர்தல்),	360
2.	திருமதி.தமிழ்செல்வி,	முதுநிலைவருவாய் ஆய்வாளர்,	210
3.	திரு.மாரிமுத்து,	முதுநிலைவருவாய் ஆய்வாளர்,	250
4.	செல்வி.மு.தமீம்பானு,	இளநிலைவருவாய் ஆய்வாளர்,	370
5.	திரு.ஜீவானந்தம்,	முதுநிலைவருவாய் ஆய்வாளர்,	-

6.	திருமதி.லிங்கலட்சுமி,	தட்டச்சர்,	140
7.	திரு.மாரிச்சாமி	பதிவுறுஎழுத்தர்,	-
8.	திருமதி.ஈ.சாந்தி,	முதுநிலைவரைவாளர்,	80
9.	திரு.கார்த்திக்,	உதவி மேலாளர்,	132
10.	திரு.அருளரசன்,	தொழில்நுட்பஉதவியாளர்	-
11.	திரு.விக்னேஷ்,	தொழில்நுட்பஉதவியாளர்	800
12.	திரு.மனோபாலன்,	தொழில்நுட்பஉதவியாளர்,	500
13.	திரு.சூர்யபாண்டியன்,	தொழில்நுட்பஉதவியாளர்,	2000
14.	திரு.ரத்தினமாலா,	கேபிள் டிவிதாசில்தார்,	1400
15.	திரு.சசிகுமார்,	ஓட்டுநர்	50
16.	திருமதி.கலைவாணி,	டேட்டாஎண்ரிஆபரேட்டர், (இ.சேவை)	50
17.	திருமதி.தீபிகா,	டேட்டாஎண்ரிஆபரேட்டர், (இ.சேவை)	50
18.	திரு.மணிகண்டன்,	முதுநிலைவருவாய் ஆய்வாளர்,	120
19.	திரு.பாலமுருகன்,	முதுநிலைவருவாய் ஆய்வாளர்,	-
20.	திருமதி.சத்யப்பிரியா,	இளநிலைவருவாய் ஆய்வாளர்,	310
21.	திரு.பரமேஸ்வரன்,	அலுவலகஉதவியாளர்,	260
22.	திரு.சங்கரபாண்டியன்,	ஆதார் ஆபரேட்டர்,	2500 மற்றும் 320
	(18 x100, 10x50, 20x10) 2500 (9x20, 14x10) 320 சோதனையின்போதுபேண்டின் 2 பாக்கெட்டுகளில் தனித்தனியாகரூ.2500,320 இருந்தது. ரூ.320/- தனதுசொந்தப்பணம் என்றும் தெரிவித்தார்.ரூ.2500/- குறித்து தகுந்த விளக்கம் அளிக்கமுடியாமல் முன்னுக்குபின் முரணாக தெரிவித்ததால் உரியமுகாந்திரம் இல்லாதகணக்கில் வராத பணமாக கருதி விசாரணைக்காகரூ.2500/- கைப்பற்றப்பட்டது. ரூ.320/- திரும்பஅவரிடம் கொடுக்கப்பட்டது.		
23.	திரு.க.லோகேஸ்வரன்,	புலஉதவியாளர்,	300
24.	திரு.பா.பிரசாத்,	புலஉதவியாளர்,	300

25.	திரு.நா.தினேஷ்குமார்,	சார் ஆய்வாளர்,	40
26.	திருமதி.உமாதேவி.	தொழில்நுட்பஉதவியாளர்,	150
27.	திரு.பாண்டி.	ஊராட்சிசெயலர், சிலையம்பட்டி	5500 மற்றும் 690
	சோதனையின்போதுஇவரது இடதுபுறசட்டைமேல்பாக்கெட்டில் இருந்தபணம் இவர் கடந்த 2 நாட்களாகசிலையம்பட்டிஊராட்சியில் மக்களிடம் வீட்டு வரிக்காகவசூலித்த பணம் ரூ.5500/- (500 x 11) என்றும் இதனைதான் உரியவங்கிக்கணக்கில் இது வரை செலுத்தவில்லை என்றும் இந்த பணத்தில் இன்றுஊராட்சி அலுவலகத்திற்குமண்வெட்டி போன்ற உபகரணங்கள் வாங்க இருந்ததாகவும் தெரிவித்தார். இது குறித்துயாரிடம்,எவ்வளவுவரிவசூல் பெறப்பட்டதுஎன்றவிவரம் இவரால் தெரிவிக்க இயலவில்லை. காலஅவகாசம் கொடுத்தபின்னரும் ரூ.5500/-க்கானஉரியமுகாந்திரம் தெரிவிக்காததால் இந்தப்பணம் கணக்கில் வராதபணமாகஉள்ளதால் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. பேண்ட் பாக்கெட்டில் இருந்தரூ.690/- அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததன் பேரில் விசாரணைக்குப்பின் திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.		

வெளிநபர்கள்

வ.எண்	ஆய்வின் போது இருந்தவெளிநபர்களின் பெயர்	ஆய்வின் போதுகையிலிருந்தமற்றும் திரும்பகொடுக்கப்பட்ட தொகை
1.	திரு.கண்ணன்,	2220
2.	திரு.ராமர்,	-
3.	திரு.ராம்சன்பிரபு,	123
4.	திரு.சம்சுதீன்,	330
5.	திரு.வரணன்,	30
6.	திரு.அழகர்ராஜா,	2000
7.	திரு.யுகதீஸ்,	150
8.	திரு.இராகவன்	1530
9.	திரு.கார்த்திகேயன்,	85
10.	திரு.ஈஸ்வரன்,	2500
11.	திருமதி.சித்ரா,	50
12.	திரு.ராஜ்குமார்,	340
13.	திரு.மூர்த்தி,	50
14.	திரு.ராமகிருஷ்ணன்,	700

மேற்கண்டபட்டியலில் குறிப்பிட்ட 2 நபர்கள் தவிரமற்றவர்களிடம் சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டபணம் உரியமுகாந்திரத்தின்பேரில் திரும்பஅவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்கண்டஅனைவரின் செல்போன்களும்

அந்தந்தநபர்கள் முன்னிலையில் திரைதிறக்கப்பட்டுUPI transaction விவரம் கண்டறியப்பட்டது. அதில் திரு.சங்கரபாண்டியன், திரு.பிரசாத்,திருமதி.சாந்தி ஆகியோரின் பணப் பரிவர்த்தனைகள் விவரம் குறித்து அவர்களிடம் கேட்டபோது உரியவிளக்கம் தரவில்லை. சந்தேகத்திற்-கிடமான பணப்பரிவர்த்தனைகள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்ததனி நபர்களிடம் அரசு வேலையை செய்து முடிக்க முறைகேடாக பெற்ற/கையூட்டு பணப் பரிவர்த்தனைகளாக இருக்கலாம் என்ற முகாந்திரத்தின்பேரில் விசாரணையின் போது கண்டறியப்பட்டுஅதன் விவரங்கள் Screen Shot எடுக்கப்பட்டு தேதி வாரியாக பின் கண்டவாறு பணப் பரிவர்த்தனைகள் உள்ளது.

திரு.சங்கரபாண்டியன்,ஆதார் ஆபரேட்டர் (தற்காலிகஒப்பந்தபணியாளர்)

Phone Pay Number7667037437

வ. எண்	Phone Pay -ல் பணம் அனுப்பியநபர்	தொகை	நாள் 2026
1.	M.Praveen	10120	Jul-01
2.	A.Sasikumar	5000	Jul-04
3.	A.Sasikumar	3080	Jul-07
4.	Basithkhan	2000	Jul-09
5.	M.Praveen	2000	Jul-04
6.	Mrs,Lakshmi p	2000	Jul-02
7.	Murugan Rajendran	2000	Jul-02
8.	Senkuttuvan	500	Jul-09
9.	Senkuttuvan	400	Jul-13
10.	Anandakumar	1000	Jun-30
11.	Nathiya	2000	Jun-25
12.	DMK Muthukumar, Bodi)	11880	Jun-13
	Total	40180	

இவரது 27.04.2026-ம் தேதிDMKஎன்றபெயர் பதிவில் Whatsapp குரல் பதிவுசோதனை செய்ததில் சுமார் 11 நிமிடம் உள்ளகுரல் பதிவு முருகேசன் மனு எழுதுபவர், போடிதாலுகா ஆபிஸ் என்பவருக்கும் சங்கரபாண்டியனுக்கும் இடையே நடந்த உரையாடல்கள் சங்கரபாண்டியனால் பதிவு செய்யப்பட்டு DMK (முத்துக்குமார்) என்பவருக்கு சங்கரபாண்டியனால் அனுப்பப்பட்ட பதிவுகள் உள்ளது. இதில் ஆதார்

அட்டையில் பிறந்த தேதி மாற்றம் செய்யரூ.3000/- வாங்கி அனுப்புமாறு சந்தேகத்திற்கிடமான சங்கரபாண்டியன் என்பவரின் உரையாடல்கள் உள்ளதை விசாரணைக்காக பெறப்பட்டுபதிவிறக்கம் செய்யப்பட்டு Screen Shot ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் மற்றும் தனிவட்டாட்சியர் திருமதி.ரத்தினமாலா முன்னிலையில் விசாரணைக்காக பெறப்பட்டது.

திருமதி.சாந்தி,முதுநிலைவரைவாளர்Phone Pay Number9791874344

வ. எண்	Phone Pay ல் பணம் அனுப்பியநபர்	தொகை	நாள் 2026
1.	Jagadeesh	2500	Jul-16
2.	Jagadeesh	5000	Jul-14
3.	Jagadeesh	5000	Jul-11
4.	Jagadeesh	20000	Jul-10
	Total	32500	

மேலும் மே-18 தேதியில் ரூ.5000,ரூ.1300,ரூ.400 எனவும், மே-13 தேதியில் ரூ.1000.ரூ3000.ரூ2000.ரூ1000 எனவும் பணபரிவர்த்தனைகள் உள்ளது. ஜெகதீஸ் தனதுகணவர் என்றும் கால் டாக்சிஓட்டும் அவர் தனக்குகிடைக்கும் பணத்தினை அவரின் மனைவியான தனக்கு மேற்கண்டவாறுஅனுப்பியதாகவும், இவ்வாறு ஒரேநாளில் பலமுறையும், அடிக்கடிதனக்குபணம் அனுப்பும் காரணம் அவரிடம் தான் கேட்டுபின்னர் தெரிவிப்பதாகவும் லோன் கடனை அடைப்பதற்காகதனதுகணவர் தனக்கு அனுப்பியி-ருக்கலாம் எனவும் தெரிவித்தார். இப்பணப் பரிவர்த்தனைகளுக்கான உரிய முகாந்திரம் இல்லாததால் சந்தேகத்தின் அடிப்படையில் Screen Shots விசாரணைக்காக ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. அதேபோல் திரு.பிரசாத், புல உதவியாளர் தற்காலிக ஒப்பந்த பணியாளர் என்பவரின் Phonepay பணப்பரிவர்த்தனைகளை சோதனைசெய்ததில் மே-3 2026 முதல் ஜீலை-8 2026 வரைமொத்தம் 26 பணப் பரிவர்த்தனைகள் மொத்தம் ரூ.2,07,500/-ற்கு இருந்தது. இது குறித்து விசாரிக்க மேற்கண்டபணம் தேனி முனிசிபல் சர்வேயராகபணிபுரியும் திரு.கணேஷ்குமார் அவர்களின் தற்காலிகபணியாளர் (உதவியாளர்) திருG.ஜெயக்குமார் என்பவரால் கணேஷ்குமார் தெரிவித்தபடிதனது (பிரசாத்) Phone pay 9940967137-ஐ அவர்களிடம் நிலஅளவை தொடர்பாகவரும் மனுதாரர்களிடம் கொடுக்கப்பட்டதாகவும் அதன் படி

மனுதாரர்கள் பல்வேறுதேதியில் தனது Phone pay எண்ணிற்கு கையூட்டுபணத்தை அனுப்பியதாகவும் அதனை பெற்ற பின்னர் தான் கணேஷ்குமார் தெரிவிக்கும் Phonepay எண்ணிற்கு பணத்தை transfer செய்ததாகவும் அதன் விவரங்கள் தனதுபோன்பே ஸ்டேட்மெண்டில் உள்ளதை இப்போதுபிரிண்ட் எடுத்து சான்றொப்பமிட்டு விசாரணைக்கு வழங்கியதாகவும் தெரிவித்தார். இதைப்பார்வையிட்டதில் ஜீலை-8 2026-ல் ரூ.14,200/- ManiSekaran AD sir Home, மே-23 2026-ல் ரூ.10,000/- Ganeshkumar-க்குஅனுப்பப்பட்டுள்ளதாகவும் 2026-ல் ரூ.3,500/- from Jayakumar, ஜீலை-7 2026-ல் ரூ.25,000/- from Priya, ஜீன்-8 2026-ல் ரூ.10,000/- from Dhanila Buildersபோன்றவகையில் இதன் இணைப்பில் கண்டPhonepay Statement from March-24 2026 முதல் Jul-17 2026 வரைபதிவிறக்கம் செய்துபிரிண்ட் எடுக்கப்பட்டு பணப்பரிவர்த்தனைகள் மொத்தம் 30 தாள்கள் விசாரணைக்காக ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் திரு.பிரசாத் என்பவரிடமிருந்துசான்றொப்பம் பெற்றுகைப்பற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அலுவலத்தில் தரைதளத்தில் உள்ள இசேவைமையம் பணியாளர் தீபிகா, கலைவாணி உடனிருக்க சோதனை செய்யப்பட்டு இன்றைய இசேவை மனுக்கள் கவுண்டர் -1 29, கவுண்டர்-2 34, Service wise transaction report இரண்டுதாள்களில் கணினியில் இருந்துபிரிண்ட் எடுக்கப்பட்டுதுணை மேலாளர்,கேபிள் டிவி திரு.கார்த்தி பொறுப்பு அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்தஅறையின் எதிரே உள்ள நிலஅளவைப் பிரிவின் முதுநிலை வரைவாளர்,நிலஅளவர், புல உதவியாளர்கள் பணிபுரியும் முதலில் உள்ள இரண்டு கண்ணாடி தடுப்பினாலான அலுவலகப்பகுதியும் அதனையொட்டி தென்வடலாக உள்ள தலைமைநிலஅளவர்/ வட்டதுணை ஆய்வாளர் திரு.சுருளிஆனந்தன் அவர்கள் அறையும்,அதன் எதிரேயுள்ள இரண்டு ஆவணகோப்பு அறைகள் சோதனை செய்யப்பட்டதில் கைப்பற்றத்தக்க ஆவணங்கள் பணம் ஏதுமில்லை.திரு.சுருளிஆனந்தன்,வட்டசார் ஆய்வாளர் திரு.பிரபாகரனும் பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஆக்கிரமிப்பு அகற்றும் மீட்டிங் சென்றுள்ளதாகவும்,2 பிர்காசர்வேயர்கள் திருமூர்த்தி, முரளிதரன், 2 பீல்ட் சர்வேயர்கள் ஜெயபிரகாஷ், ஆப்ரின் பானு, புல உதவியாளர் கண்ணன் ஆகியோர்கள் புலப்பணிக்கு சென்றுவிட்டதாகவும், புலஉதவியாளர் காளிகிருஷ்ணவேணி விடுப்பில் உள்ளதாகவும், ஆஜரில் இருந்த இப்பிரிவின் அலுவலர்கள் தினேஷ்குமார், யோகேஸ்வரன், சாந்தி, பிரசாத் ஆகியோர்கள் தெரிவித்தனர். முதல்தளத்தில்

வலதுபுறம் முதல்அறை சமூக பாதுகாப்புதிட்டம் தாசில்தார் திருமதி.உதயராணி (இன்னும் பணியேற்புசெய்யவில்லை). அவர்களின் அலுவலக அறையை சோதனைசெய்ததில் ஏதும் கைப்பற்றப்படவில்லை. இப்பிரிவில் பணியாளர்கள் யாரும் ஆஜரில் இல்லை. இதனையடுத்து கிழமேற்காக இரண்டு கம்யூட்டர்கள், ஒருபிரிண்டருடன் கம்யூட்டர் அறைஉள்ளது. இதனை அனைத்து பணியாளர்களும் பயன்படுத்துவர் எனஅறியப்பட்டது. இதனையடுத்துஆண்,பெண் கழிவறைகள் உள்ளது. இந்ததளத்தில் கம்யூட்டர் ரூமுக்குஎதிரேகேபிள் டிவிபிரிவின் ஸ்டாக் ரூம் செட்டாப் பாக்ஸ்களுடன் உள்ளது. இதனையடுத்து தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியர் திரு.எஸ்.கார்த்திக், திருமதி.உமாதேவி,சென்சஸ் தொழில்நுட்ப உதவியாளர் அலுவலக அறை உள்ளது. இதனையடுத்து தனிவட்டாட்சியர் திருமதி.ரத்னமாலா மற்றும் அலுவலர்கள் உதவிமேலாளர் கார்த்தி, உதவிதொழில் நுட்ப உதவியாளர்கள் விக்னேஷ், மனோபாலன்,அருளரசன், சூர்யபாண்டியன் ஆகியோர்கள் அலுவலக அறை உள்ளது. இந்த அனைத்து அறைகளிலும், அலுவலர்கள் பைகளையும் சோதனைசெய்யததில் கைப்பற்றப்படக்கூடிய ஆவணங்கள்,பணம் ஏதும் இல்லை. முதல்தளத்தில் படிக்கட்டின் இடது புறம் வட்டாட்சியர் திருமதி.ரத்தினம் அவர்கள் அறையில் இல்லை. இந்த அறையை சோதனை செய்த போதுகபோர்டுகள்,மேஜைகீழ் டிராயர் பூட்டப்பட்டிருந்தது. இதுகுறித்தவிவரம் ஆஜரில் இருந்தவர்களை கேட்க தெரியவில்லை என தெரிவித்தனர். திருமதிரத்தினம் அவர்களை தொடர்புகொள்ள இயலவில்லை. வட்டாட்சியர் பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஆக்கிரமிப்பு அகற்றும் மீட்டிங் சென்றுள்ளதாகதேர்தல் துணைவட்டாட்சியர் தெரிவித்தார். இந்த அறைக்கு எதிரே உள்ளதலைமையிடத்துதுணைவட்டாட்சியர் (காலியிடம்) அதனை ஒட்டியிருந்த பொது அலுவலகப்பிரிவில் இருந்த ஏ-1, ஏ-3, ஏ-7, ஏ-12, ஏ-13, ஏ-6, ஏ-2, ஆர்சிகிளார்க், மண்டலதுணைவட்டாட்சியர் திரு.சிவன்காளை (விடுப்பு) இருக்கைகள்,பைகள் சோதனையிடப்பட்டது. தலைமையிடத்து துணைவட்டாட்சியர் அறையில் Static VHF கருவி பொருத்தப்பட்டுள்ளது. ஆஜரில் இருந்த முதுநிலைவருவாய் ஆய்வாளர் திருமதி .தமிழ்செல்வி, ஜீவானந்தம், மாரிமுத்து, ஆர்.சிமாரிச்சாமி, இளநிலைஉதவியாளர் தமீம்பானு முன்னிலையில் அறைகள் சோதனையிடப்பட்டதில் அலுவலகக் கோப்புகள் தவிரவேறுஏதும் இல்லை. இரண்டாம் தளத்தில் படியேறியவுடன் இடதுபுறம் வட்ட வழங்கல் அலுவலர் திருமதி.இந்திரா அலுவலகம் பூட்டியநிலையில் இருந்தது. இதில் சிவில் சப்ளை

ஆர்.ஐ.திருமதி.மணிமேகலை, டேட்டாஎண்ரிஆபரேட்டர் ரேணுகா பணிபுரிவதாகவும், திருமதி.இந்திராஅவர்களைபோனில் தொடர்புகொண்டதில் மாவட்டஆட்சியர் மீட்டிங் முடித்துமதியம் தான் வீட்டிற்குசென்றுவிட்டதாகவும் மற்ற இருவரும் வெளி வேலையாக போனதாகவும் அலுவலஉதவியாளர் பரமேஸ்வரன் மூலம் அலுவலகசாவியை எடுத்து சோதனையிடலாம் எனவும் தெரிவித்தார். அதன்படி அந்த அறை திறக்கப்பட்டு சோதனைசெய்யப்பட்டது. அதனை அடுத்து கோட்டகலால் அலுவலர் திரு.ரமேஷ்குமார் (மாற்றுப்பணிமாவட்டஆட்சியர் அலுவலகம்) அவர்கள் அலுவலகம் முதுநிலைவருவாய் ஆய்வாளர் மணிகண்டன் ஆஜரில் இருந்தவர் முன்னிலையில் சோதனையிடப்பட்டது. ஆர்.ஐ.திருசெல்வராஜ் உயர்நீதிமன்ற பணியாகவும், திரு.ஒச்சாதேவன் (மாற்றுப்பணிமாவட்டஆட்சியர் அலுவலகம்), தட்டச்சர் திரு.ஜன்னத் பர்தோஷ் இன்று மாற்றுப்பணி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், முதுநிலைவருவாய் ஆய்வாளர் பூமிநாதன் மாற்றுப்பணி மதுரை உயர்நீதிமன்றம் பணியாகவும் உள்ளதாக ஆர்ஐ மணிகண்டன் தெரிவித்தார். இதனையடுத்து ஆதிதிராவிடர் நலத்துறைவட்டாட்சியர் திரு.கண்ணன் அலுவலக அறை உள்ளது. இவர் மாவட்டஆட்சியர் மீட்டிங் சென்றுள்ளதாகஆர்ஐபாலமுருகன் தெரிவித்தார். இப்பிரிவில் ஆர்ஐ சுருளிஆண்டவர் மாவட்டநீதிமன்றம் தேனி இன்று சென்றுள்ளதாகவும், RI ஜெயலட்சுமி, டிரஸரி சென்றுள்ளதாகவும், தட்டச்சர் பாக்யலட்சுமி, மாலை 4 மணிக்கு ஓய்வில் சென்றதாகவும் ஆர்ஐ பாலமுருகன் தெரிவித்தார். சர்வேயர் வஜ்ரவேல் பீல்ட் வொர்கசென்றதாகவும் தெரிவித்தார். இதனையடுத்து எழுதுபொருள் வைப்பறையும், அதனையடுத்து கிழமேற்காகபெரிய ஹாலும் உள்ளது. இதில் ஆர்.ஐ பாலமுருகன், இளநிலை ஆர்.ஐ சத்தியபிரியா, OA பரமேஸ்வரன் ஆஜரில் இருந்தவர்களுடன் மேற்கண்ட அறைகள் சோதனை செய்யப்பட்டது. ஆட்டியிருந்த பீரோக்கள் சாவியைஜேஏ திருமதி.ஜெயலட்சுமி வந்து திறக்கு சோதனையிடப்பட்டது. இந்த அலுவலகத்தில் 3 தளங்களிலும் உள்ள அனைத்து அலுவலக அறைகளையும், பணியாளர்களின் இருக்கைகளையும், பீரோக்கள், கீபோர்டு சோதனையிட்டதில் அலுவலக ஆவணங்கள், கோப்புகள், பதிவேடுகள் தவிரவேறுஏதும் இல்லை. தனிவட்டாட்சியர் திருமதி.ரத்னமாலா, தேர்தல் பிரிவு துணைவட்டாட்சியர் திரு.கார்த்திக்,கோட்டக்கலால் பிரிவுஆர்.ஐ திரு.மணிகண்டன், ஆதிதிராவிடர் நலத்துறை ஆர்.ஐ திரு.பாலமுருகன் ஆகியோரை விசாரித்ததில் இந்த அலுவலகபணியாளர்கள் காலையில் அலுவலகம் வரும்போது தங்களிடம் உள்ளபணத்தை பதிவுசெய்யும் தனிநபர் பணகையிருப்பு பதிவேடு மற்றும்

வெளிபணியிக்கு செல்லும்போது பதிவுசெய்யும் இயக்கபதிவேடு பயன்பாட்டில் இல்லைஎன்றும் தெரிவித்தனர். கொடிநாள்பணம் நன்கொடையாளரிடம் நேரடியாக பணமாக வசூலிப்பதில்லை என்றும் இணையவழியல் பணபரிவர்த்தனை நன்கொடையாளர்களால் இசேவை மையம் மூலமும்,QR Code மூலமாகவும் செலுத்தப்படும் என்றும். இது குறித்து ஆவணப்பதிவு ஏதும் பராமரிக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தனர். அலுவலகவளாகத்தில் இடதுமுன்புறம் உள்ள ஆதார் சேவைமையத்தை அதன் பணியாளர் சங்கரபாண்டியன் உடன் இருக்கசோதனை செய்ததில் ஒருகம்யூட்டர் பிரிண்டர் மட்டும் உள்ளது. இன்றுபூதிபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குகேம்ப் அலுவலராகசென்றுவிட்டு (24 பதிவுகள்)மதியம் இங்குவந்து 3 ஆதார் திருத்தப்பதிவுகள் செய்ததாகவும் சங்கரபாண்டியன் தெரிவித்தார். இந்த அறையைசோதனை செய்ததில் பழையமனுக்கள் தவிரவேறுஏதும் இல்லை. மேலும் சோதனையின் போதுகோட்டக்கலால் அலுவலகம் வருகைப்பதிவேடு, தேனிவட்டாட்சியர் அலுவலகம் வருகைப்பதிவேடு, தனிவட்டாட்சியர் ஆதிதிராவிடர் நல்த்துறைஅலுவலகம் வருகைப்பதிவேடு, தமிழ்நாடு அரசுகேபிள் டிவி நிறுவன அலுவலகம் வருகைப்பதிவேடு ஜீலை-2026 பக்கங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஆஜரில் இருந்த திருமதி.ரத்னமாலா, திரு.கார்த்திக் ஆகியோரிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக பெறப்பட்டது. இந்ததிடீர் இணை ஆய்வின் போது அலுவலக அறைகளிலிருந்து பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. கணக்கில் வராத சந்தேகத்திற்கிடமான பணம் ரூ.5500 திரு.க.பாண்டி, த/பெ.கணபதி, ஊராட்சி செயலர், சீலையம்பட்டி என்பவரிடமிருந்தும்,ரூ.2500/- திரு.சங்கரபாண்டியன், ஆதார் ஆபரேட்டர் என்பவரிடமிருந்தும் ஆகமொத்தம் ரூ.8000/- ரொக்கப்பணம் கையூட்டாக பெறப்பட்டபணமாக இருக்கலாம் என்ற முகாந்திரத்தின் அடிப்படையில் விசாரணைக்காக ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும் சந்தேகத்திற்கிடமான கணக்கில் வராதகையூட்டாக பெறப்பட்டபணமாக இருக்கலாம் என்ற முகாந்திரத்தின் அடிப்படையில் UPI Transaction செய்யப்பட்ட மொத்தபணம் ரூ.2,80,180/-ற்கான பணப்பரிவர்த்தனை கணக்குவிவரம் (ரூ.40,180 +ரூ.32,500+ ரூ.2,07,500 = ரூ.2,80,180) Screen Shots எடுக்கப்பட்டும், பணப்பரிவர்த்தனை Phonepay Statement-களும் விசாரணைக்காக திரு.சங்கரபாண்டியன், ஆதார் ஆபரேட்டர் (தற்காலிக ஒப்பந்த பணியாளர்), திருமதி.சாந்தி, முதுநிலை வரைவாளர், திரு.பிரசாத் ஆகியோரிடமிருந்து

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த அலுவலகத்தில் நிரந்தரவைப்புத்தொகை பணம் கையிருப்புஏதும் இல்லை என தனிவட்டாட்சியர் திருமதி.ரத்னமாலா தெரிவித்தார். சோதனைக்குப்பின் அனைத்து அலுவலகப் பணியாளர்களிடமும் தனிநபர்களிடமும் எழுத்து மூலமான விளக்ககடிதம் ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் பெறப்பட்ட பின் உடனுக்குடன் நல்லநிலையில் அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் இச்சோதனையின் போது அலுவலகத்தில் இருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் இச்சோதனையின் போது இருந்த அலுவலக அலுவலர்கள், தனிநபர்கள் நன் முறையில் நடத்தப்பட்டனர். இந்த திடீர் இணை கூட்டாய்வு விவரங்கள் செயல்முறை ஆணையாக கணினியில் பதிவுசெய்யப்பட்டு 18.07.2026-ஆம் தேதி காலை சுமார் 03.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி தேனி தாலுகா, வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக பணியார்களான திரு.சங்கரபாண்டியன், ஆதார் ஆபரேட்டர் என்பவரிடமும், திடீர் கூட்டு ஆய்வின் போது இருந்த திரு.பாண்டி, ஊராட்சிசெயலர், சீலையம்பட்டி ஊராட்சி அலுவலகம் என்பவரிடமும் இருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.8,000/-(500x11) (18x100,10x50,20x10) மற்றும் சந்தேகத்திற்கு இடமான கணக்கில் வராத கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்ற முகாந்திரத்தின் அடிப்படையில் அலுவலக பணியாளர்கள் திரு.சங்கரபாண்டியன், ஆதார் ஆப்ரேட்டர், திரு.பிசராத், புல உதவியாளர், திருமதி. சாந்தி, முதுநிலை வரைவாளர் ஆகியோரின் Cell phone சோதனையில் கண்டறியப்பட்ட UPI Transaction phone pay மொத்த பணம் ரூ.2,80,180/-ற்கான பண பரிவர்த்தனை கணக்கு விவரம் மேற்கண்ட அலுவலர்களின் சான்றொப்பம் பெற்ற Screen shots மற்றும் phone pay accounts statements விவரம் மொத்தம் 30+12 தாள்கள், திடீர் இணை ஆய்வின்போது ஆஜரில் இருந்த நபர்களிடம் பெறப்பட்ட எழுத்து மூலமான கடிதம் மொத்தம் 41, ஆய்வு குறிப்பில் கண்ட இசேவை மனுக்கள் கவுண்டர் 1-ல் 29, கவுண்டர் 2-ல் 34 service wise transaction report 2 தாள்கள், விசாரணைக்கா பெறப்பட்ட வட்டாட்சியர் அலுவலக பிரிவு வருகைபதிவேடுகளின் சான்றொப்பம் இட்ட நகல்கள், திடீர் இணை ஆய்வு செயல்முறை 1 முதல் 14 பக்கங்கள் ஆகியவைகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தேனி வட்டாட்சியர் அலுவலக திடீர் இணை ஆய்வு சோதனையில் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத லஞ்சபணம் ரூ.8,000/-, Phone pay பண பரிவர்த்தனை ரூ.2,80,180/- தொடர்பாக அதற்கான

பொறுப்பு அலுவலர்களான 1.திரு.P.சங்கரபாண்டியன், ஆதார் ஆப்ரேட்டர், 2.திரு.P.பிரசாத், புலஉதவியாளர் (தற்காலிக ஒப்பந்த பணியாளர்) 3. திருமதி. ஈ.சாந்தி, முதுநிலை வரைவாளர், 4.திரு.க.பாண்டி, ஊராட்சி செயலர், சீலையம்பட்டி ஊராட்சி, தேனி ஆகியோர்கள் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) **S**.சுப்புலட்சுமி,ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. நாள்: 18.07.2026.

Sir, Received the complaint today on 18.07.2026 at 17.00 hrs along with joint surprise check proceedings, dt : 18.07.2026, Statements letters, Sezied documents, cash Rs,8,000/-. After obtaining permission from the Superior officers, registered a case in Theni V&AC, Cr.No.03/2026, U/s 7(a) of The Prevention of Corruption Act 1988, as amended in 2018 and u/s 106 BNSS on 18.07.2026 at 17.00 hrs.

Original FIR along with the complaint of Tmt. S.Subbulakshmi, Inspection Cell Inspector, O/o Inspection Cell Office, Madurai and the joint Surprise check proceedings dt: 18.07.2026 are submitted to the Hon'ble Principle District Sessions Judge, Theni and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

T. R. 18/7/2026

T.Rameswari,
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Theni District.